

# வேற்றுமொழி பேசும் பெற்றோர்களுக்கான சிபாரிசுகள்:

நீங்கள் உங்கள் பிள்ளையுடன் ஜேர்மன்மொழி தவிர்ந்த வேற்றுமொழி ஒன்றில் உரையாடுகிறீர்களா? உங்கள் பிள்ளை ஒன்றுக்கு மேற்பட்ட பாஷையில் வளருகிறதா? அனேகமான பிள்ளைகளுக்கு இது ஒரு பிரச்சனையேயில்லை. மாறாக பல பாஷையில் வளருவது பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு வழிவகையாகும்.

தாய்மொழியைக் கற்பதன்மூலம் பிள்ளை தனது கலாச்சாரத்தையும் தனது தாய்நாட்டைப் பற்றியும் அறிந்து கொள்கிறது. அத்துடன் ஜேர்மன்மொழியைச் சிறிய வயதிலேயே கற்பதும் அவசியமாகும்.

## உங்கள் பிள்ளைக்கு பின்வருமாறு நீங்கள் உதவி செய்யலாம்:

- உங்களுக்கு மிகவும் ஆளுமையுள்ள (மிகவும் ஆளுமையுள்ள (மிகவும் நன்றாகத் தெரிந்த) பாஷையில் பிள்ளையுடன் உரையாடவும்.
- உங்கள் பிள்ளைக்கு முக்கியமாக நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதனைக் கூறவும். அவர்கள் சொல்வதைக் கூர்ந்து கேளுங்கள், கதைகள் கூறுங்கள், பிள்ளைகள் ஏதாவது சொல்ல முற்பட்டால் தட்டிக் கொடுத்து வரவேற்றுக் கொள்ளுங்கள். முக்கியமாக உங்கள் பிள்ளை பேசுவதற்கு சந்தோஷப்படும் சூழ்நிலையை உருவாக்குங்கள்.
- முடிந்தவரை குறைந்த வயதில் உங்கள் பிள்ளை ஜேர்மன் மொழியுடன் தொடர்பிலிருப்பது நல்லது. உங்கள் பிள்ளை ஜேர்மன்மொழிபேசும் பெரியவர்களுடனும் மற்றும் பிள்ளைகளுடனும் எவ்வளவு தொடர்பிலிருக்கிறதோ அவ்வளவு விரைவாக உங்கள் பிள்ளை ஜேர்மன் மொழி பேசப்பழகிக் கொள்ளும்.
- உங்கள் பிள்ளை பிழைகள் விடலாம். அத்துடன் ஒரு பாஷையுடன் இன்னொரு பாஷையைக் கலந்து பேசலாம். அது வழமையானதொன்றாகும். காலஓட்டத்தில் அது மறைந்துவிடும்.
- பிள்ளை எவ்வளவு நன்றாகத் தனது முதலாவதுமொழியைப் பேசுகிறதோ அவ்வளவு நன்றாக ஜேர்மன்மொழியைப் (மற்றையமொழிகளையும்) பயிலும். பிள்ளை தனது முதலாவது பாஷையைக் கட்டியமைத்து அதில் மற்றைய பாஷைகளைக் கட்டும். அதேவேளை தனது முதலாவது பாஷையுடன் மற்றைய பாஷைகளை ஒப்பிட்டுப் பார்க்கும்.

## உங்கள் பிள்ளை பாஷைகள கற்பது விடயமாக உங்களுக்கு ஏதாவது கேள்விகள் உண்டா?

உங்கள் பிள்ளை சரியான முறையில் பாஷைகளைக் கற்கிறதா? உதாரணமாக பிள்ளை குறைவாகப் பேசுகிறதா அல்லது தெளிவில்லாமல் பேசுகிறதா? அல்லது நீங்கள் பேசுவது அதற்குப் புரியவில்லையா? அப்படியாயின் அதற்குரிய இடத்தில் நீங்கள் தகவல் ஆலோசனைகள் பெறலாம். இதனைவிட பிள்ளையின் வைத்தியருடனோ அல்லது பின்வரும் இடத்திலோ பெற்றுக் கொள்ளலாம்.

**Zentrum für Frühförderung (ZFF)** ▪ Elisabethenstrasse 51, Postfach, 4010 Basel
Tel. 061 267 85 01 ▪ Fax 061 267 84 96 ▪ zff@bs.ch ▪ www.zff.bs.ch





# மற்றைய பயனுள்ள தகவல்கள்:

.பெற்றோர்களுக்கான உதவிநிலையம் பாசல்நகரம்

- **Mütter- und Väterberatung Basel-Stadt**
  Tel. 061 690 26 90
  info@muetterberatung-basel.ch ▪ www.vereinfuerkinderbetreuung.ch

உங்கள் சுற்றாடலில் ஓர் **Spielgruppe** தேடுகிறீர்களா? பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

- **Fach- und Kontaktstelle für Spielgruppen Basel und Region**
  Tel. 061 690 26 96
  fks.baselplusregion@postmail.ch

**Basel-Stadt** மாநகரத்தில் ஓர் **Tagesheim** தேடுகிறீர்களா? பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

- **Vermittlungsstelle Tagesheime**
  Tel. 061 267 46 14
  vermittlung.tagesbetreuung@bs.ch ▪ www.tagesbetreuung.bs.ch

**Basel-Stadt** மாநகரத்தில் ஓர் **Tagesfamilie** தேடுகிறீர்களா? பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

- **Geschäftsstelle Tagesfamilien Basel-Stadt**
  Tel. 061 260 20 60 ▪ Fax 061 260 20 61
  info@tagesfamilien.org ▪ www.tagesfamilien.org

உங்கள் சுற்றாடலிலுள்ள ஏனைய குடும்பங்களுடன் தொடர்பு கொள்ள விரும்புகிறீர்களா? உங்கள் அருகிலுள்ள சந்திப்பு நிலையத்தைப் பற்றி அறிந்து கொள்ள பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்

- **Quartiertreffpunkte Basel**
  Tel. 061 267 43 40
  quartierarbeit@bs.ch ▪ www.quartiertreffpunktebasel.ch

பிள்ளைகளுக்காக தாய்மொழி மற்றும் கலாச்சார வகுப்புகள் பல மொழிகளில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. உங்கள் மொழியினைப் பற்றியறிய பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்

- **http://www.ed-bs.ch/bildung/pzbs/unterricht/herkunftssprachen-heimatliche-sprache-und-kultur**